டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 5.05.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 262 - Madurai | Online Edition

# மேற்கு ஆசியாவில் நிலவும் சூழல் மற்றும் அதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அண்மைத் தகவல்கள்

புது தில்லி, மே 4

மேற்கு ஆசியாவில் பதற்றம் நிலவும் சூழலில் முக்கியத் துறைகள் முழுவதும் தயார் நிலையையும், தடையற்ற செயல் பாட்டையும் உறுதி செய்வதற்காக மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது.

மேற்கு ஆசியாவில் உருவாகியுள்ள சூழ்நிலையின் பின்னணியில், எரிசக்தி விநியோகம், கடல்சார் நடவடிக்கைகள், அப்பகுதியில் உள்ள இந்திய மக்களுக்கான ஆதரவு ஆகியவை தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த அண்மைத் தகவல்கள் :

நாடு முழுவதும் பெட்ரோலியப் பொருட்கள், எல்பிஜி தடை யின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தேவையான நடவடிக் கைகளை எடுத்து வருகிறது. பொதுமக்கள் பெட்ரோல் மற்றும் டீசலை பீதியுடன் வாங்குவதையும், எல்பிஜியை தேவையில் லாமல் முன்பதிவு செய்வதையும் தவிர்க்குமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள். மக்கள் வதந்திகளை நம்பாமல், சரியான தகவல் களுக்கு அதிகாரப்பூர்வமான தகவல்களை மட்டுமே சார்ந் திருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

எல்பிஜி சிலிண்டர்களை முன்பதிவு செய்வதற்கு, பொதுமக்கள் டிஜிட்டல் முறைகளைப் பயன்படுத்துமாறும், அவசியமின்றி எல்பிஜி விநியோகஸ்தர்களை நேரில் சந்திப்பதைத் தவிர்க்கு மாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தற்போது இணையதள எல்பிஜி முன்பதிவுகள் சுமார் 99% அதிகரித்துள்ளன.

இயன்ற இடங்களில் எல்லாம் பிஎன்ஜி, இன்டக்ஷன், மின்சார அடுப்புகள் போன்ற மாற்று எரிபொருட்களைப் பயன்படுத்து மாறு மக்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். எல்பிஜி தேவையின் மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்காக, மண்ணெண்ணெய், நிலக்கரி போன்ற மாற்று எரிபொருள் தேர்வுகள் வழங்கப்பட்டு உள்ளன.

சிறு, நடுத்தர, இதர நுகர்வோருக்கு நிலக்கரியை விநியோகிப் பதற்காக, மாநிலங்களுக்கு அதிக அளவில் நிலக்கரியை ஒதுக்கீடு செய்யுமாறு கோல் இந்தியா மற்றும் சிங்கரேனி நிலக்கரி நிறுவனங்களுக்கு நிலக்கரி அமைச்சகம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. வீட்டு உபயோக, வணிக நுகர்வோர் இருவருக்கும் புதிய பிஎன்ஜி இணைப்புகளை எளிதாக்குமாறு மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோக நிலவரத்தை ஆய்வு செய்வதற்காக, அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் கூடுதல் தலைமைச் செயலாளர்கள் மற்றும் முதன்மைச் செயலாளர் களுடன் (உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல்) பெட்ரோலிய அமைச்சகத்தின் செயலாளர் ஒரு கூட்டத்தை அண்மையில் நடத்தினார். போதுமான அளவு எரிபொருள் கிடைப்பதை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் எடுத்துரைத்தார்.

பதுக்கல், திசைதிருப்பல், தவறான தகவல்களுக்கு எதிராகக் கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ளும் அதே வேளையில், குறிப்பாக வீட்டு உபயோக மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்காக எல்பிஜி விநியோகத்திற்கு முன்னுரிமை அளிக்குமாறு மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எல்பிஜி பதுக்கல், கள்ளச்சந்தையைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் அமலாக்க நடவடிக்கைகள் தொடர்கின்றன. 02.05.26 வரை நாடு முழுவதும் 1900-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டன. பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் திடீர் ஆய்வுகளைத் தீவிரப் படுத்தி, 02.05.26 வரை 349 எல்பிஜி விநியோக நிறுவனங் களுக்கு அபராதம் விதித்துள்ளன. 74 விநியோக நிறுவனங் களை இடைநீக்கம் செய்துள்ளன.

திசை திருப்பப்படுவதைத் தடுப்பதற்காக, விநியோக அங்கீகாரக் குறியீட்டு (DAC) அடிப்படையிலான விநியோகங்கள் 94% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

47.4 லட்சம் முன்பதிவுகள் செய்யப்பட்ட நிலையில் 02.05.26, 47 லட்சத்திற்கும் மேற்பட்ட வீட்டு உபயோக எல்பிஜி சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன. 2026 ஏப்ரல் 01 முதல், 23.44 லட்சத்திற்கும் அதிகமான 5 கிலோ எஃப்டிஎல் சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஏப்ரல் 3-ம் தேதி முதல் பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்கள், 5 கிலோ எஃப்டிஎல் சிலிண்டர்கள் தொடர்பாக சுமார் 10,100 விழிப்புணர்வு முகாம்களை ஏற்பாடு செய்துள்ளன. அவற்றில் 1,75,000 - க்கும் மேற்பட்ட 5 கிலோ எஃப்டிஎல் சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 02.05.26 ஒரே நாளில் 130 முகாம்களில் 3,778 ஐந்து கிலோ எஃப்டிஎல் சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டன.

ஐஓசிஎல், ஹெச்பிசிஎல் மற்றும் பிபிசிஎல் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்களைக் கொண்ட மூன்று பேர் கொண்ட குழு, வணிக ரீதியான எல்பிஜி விநியோகத்தைத் திட்டமிடுவதற்காக மாநில அதிகார அமைப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

01.04.26 முதல் 02.05.26 வரை சுமார் 2,14,069 மெட்ரிக் டன் வர்த்தக எல்பிஜி (112.66 லட்சத்திற்கும் மேற்பட்ட 19 கிலோ எல்பிஜி சிலிண்டர்களுக்குச் சமம்) விற்பனை செய்யப்பட்டு உள்ளது. 02.05.26, 8220 மெட்ரிக் டன் வர்த்தக எல்பிஜி (சுமார் 4.34 லட்சம் 19 கிலோ எல்பிஜி சிலிண்டர்களுக்குச் சமம்) விற்பனை செய்யப்பட்டது.

ஏப்ரல் 2026 முதல், பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களால் மொத்தம் 11,082 மெட்ரிக் டன் ஆட்டோ எல்பிஜி விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2026 மார்ச் முதல், சுமார் 6.04 லட்சம் பிஎன்ஜி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன், கூடுதலாக சுமார் 2.68 லட்சம் இணைப்புகளுக்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

02.05.26 வரை, 43,630-க்கும் மேற்பட்ட பிஎன்ஜி நுகர்வோர் MYPNGD.in இணையதளம் வழியாகத் தங்களது எல்பிஜி இணைப்புகளைத் திரும்ப ஒப்படைத்துள்ளனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களும் போதுமான கச்சா எண்ணெய் கையிருப்புடன் உயர் திறனில் இயங்கி வருகின்றன. அதேவேளையில் போதுமான பெட்ரோல், டீசல் கையிருப்பும் பராமரிக்கப்பட்டு வருகிறது. வீட்டு உபயோக நுகர்வுக்கு ஆதரவளிக்கும் வகையில், சுத்திகரிப்பு நிலையங்களில் வீட்டு உபயோக எல்பிஜி உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் எரிபொருள் சில்லறை விற்பனை நிலையங்கள் வழக்கம் போல் இயங்கி வருகின்றன.

மத்திய கிழக்கு நெருக்கடியால் கச்சா எண்ணெய் விலையில் அசாதாரணமான உயர்வு ஏற்பட்டுள்ளது. இருப்பினும், நுகர்வோரைப் பாதுகாக்கும் பொருட்டு, மத்திய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரியை லிட்டருக்கு ரூ.10 குறைத்து உள்ளது. சில்லறை விற்பனை நிலையங்களில் பெட்ரோல், டீசல் விலைகள் எந்த உயர்வுமின்றி மாற்றமின்றி உள்ளன.

வதந்திகளை நம்ப வேண்டாம் என மக்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளதுடன், பத்திரிகையாளர் சந்திப்புகள் மூலம் துல்லியமான தகவல்களை வழங்குமாறு மாநில அரசுகளையும் கேட்டுக்கொண்டுள்ளது.

மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு வழக்கமான ஒதுக்கீட்டிற்கு கூடுதலாக 48,000 கிலோலிட்டர் மண்ணெண் ணெய் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள அனைத்து இந்திய மாலுமி களும் பாதுகாப்பாக உள்ளனர். மார்ல் தீவுகளின் கப்பலான எம்டி சர்வ சக்தி என்ற கப்பல், 46,313 மெட்ரிக் டன் இந்தியாவுக் கான எல்பிஜி சரக்குடன், 18 இந்தியர்கள் உட்பட 20 பணியாளர் களுடன், நேற்று (2026 மே 02) ஹோர்மூஸ் நீரிணையைப் பாதுகாப்பாகக் கடந்தது. இக்கப்பல் 2026 மே 13 அன்று விசாகப்பட்டினத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பல் போக்குவரத்து தொடர்பான கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் தொடர்ந்து இயங்கி வருகிறது. அது செயல் படுத்தப்பட்டதிலிருந்து 8,373 அழைப்புகளையும் 17,965 மின்னஞ்சல்களையும் கையாண்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 38 அழைப்புகளும் 127 மின்னஞ்சல்களும் பெறப் பட்டுள்ளன. கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் கப்பல் போக்குவரத்துத் தலைமை இயக்குநரகம் (டிஜி ஷிப்பிங்), இதுவரை 2,953 இந்திய மாலுமிகள் பாதுகாப்பாக தாயகம் திரும்புவதற்கு வழிவகுத்துள்ளது.

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் எளிமையான, சத்தான மற்றும் கண்கவர் உணவுகளே மிகவும் பொருத்தமானவை - ஓர் அலசல்

நேற்றைய தொடர்ச்சி...

### அடுப்பில்லா சமையல் குறிப்புகள் சில என்னென்ன?

**இஞ்சி அல்வா**

**தேவைப்படும் பொருட்கள்**

இஞ்சி சாறு அரை கப்.

கொட்டை நீக்கிய பேரிச்சம்பழம் 200 கிராம்.

வெல்லத்தூள் ஒரு கப்.

ஏலத்தூள் ஒரு தேக்கரண்டி.

முந்திரி பருப்பு 25 கிராம்.



**செய்முறை**

இஞ்சி சாறில் பேரிச்சம்பழத்தை சுமார் ஒரு மணி நேரம் வரை ஊற போடவும். அத்துடன் வெல்லத் தூளையும் போட்டு குழுக்கி விடவும். ஒரு மணி நேரம் கழித்து உரலில் போட்டு நன்றாக விழுதாக அரைத்து ஏலத்தூள், முந்திரிப் பருப்பு இவற்றையும் போட்டு நன்றாக கிளறவும். பின் ஒரு தட்டில் ஊற்றி காய வைத்து அவற்றை சிறு சிறு துண்டுகளாக வெட்டி நாம் சாப்பிடலாம்.

**பயன்கள்**

பசியின்மையை போக்கி நாவிற்கு நல்ல ருசியை தருகிறது.

உடலுக்கு வலுவூட்டுகிறது.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோயம்புத்தூர், மே 4

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்த மான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அதன்படி இம்மாதத்திற்கான பயிற்சி, 06.05.26 புதன்கிழமை அன்று அளிக்கப்படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டு பிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியானது காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தொலைபேசி எண் : 0422-6611214, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நவீன வேளாண்மையில் இயற்கை உரங்கள் தயாரித்தல்

இயற்கை உரங்கள் பயிருக்குத் தேவையான சத்துக்களை சிறிது சிறிதாக காலங்காலமாக வழங்கி வரும். அவற்றில் சத்துக்கள் குறைந்து காணப்பட்டாலும் இயற்கை உரங்களி லிருந்து எளிய முறையில் கிடைத்துக் கொண்டிருக்கும் அதே சமயம் அவற்றை நிலத்திற்கு எந்த அளவிற்கு இட்டாலும் நன்மை தான் கிடைக்குமே தவிர பயிர் வளர்ச்சியை பாதிக்காது.



மேலும் கைவாள்வதிலும் எந்த எச்சரிக்கையும் தேவை யில்லை. பொதுவாக இன்று நிலவிவரும் நுண்ணூட்டச்சத்து குறைபாடு மண்ணிற்கு காலங்காலமாக இட்டுவரும் இயற்கை உரங்களை மிகவும் குறைத்தாலும் அல்லது இடுவதை ஒரேடியாக நிறுத்தி விட்டாதாலும் ஏற்பட்டுள்ளது என்பதை நன்கு உணர வேண்டும். இயற்கை உரங்களில் உள்ள பிசின் அங்ககப் பொருட்கள் மண் துகள்களை ஒன்று சேர்த்து கெட்டிபடுத்து வதால் மண் அரிப்பு தடுக்கப்படுகிறது.

## பண்ணைக்கழிவு மக்கிய உர தயாரிப்பு தொழில்நுட்பங்கள்

மக்கக்கூடிய திடக்கழிவுகள் எல்லாம் மண்ணில் இருந்து தோன்றியவை ஆகும். எனவே மண்ணில் இருந்து தோன்றிய பொருட்கள் அனைத்தும் இயற்கை பொருட்கள் எனக் கருதப் படுகின்றது. அங்கக வேளாண்மைக்கு திடக்கழிவுகளில் இருந்து பெறப்படும் சத்துக்கள் மிக மிக அவசியம் பண்ணையில் இருந்து பெறப்படும் திடக்கழிவுகளில் பயிர்களுக்கு தேவையான எல்லா சத்துக்களும் அடங்கியே இருக்கின்றன. இந்தப் பண்ணைக் கழிவு களைச் சரியான முறையில் பயன்படுத்தினால் அதில் இருந்து அதிக சத்துக்களைப் பயிர் எடுத்துக்கொள்ளும் நிலைக்கு மாற்றித்தர முடியும்.

## கழிவுகளை சிறுசிறு துண்டுகளாக்குதல்

மக்குவித்தலின் போது கழிவுகளின் துகள்களின் அளவு முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனால் அக்கழிவுகளை மக்கு விப்பதற்கு முன்பு அவற்றை சிறுசிறு துகள்களாக்க வேண்டும். அவற்றை கையினால் செய்யும் போது மனித சக்தி அதிகமாக தேவைப் படுகிறது. அதனால் இப்பணிக்கு துகள்களாக்கும் இயந்திரத்தை பயன்படுத்தலாம். துகள்களின் பரிந்துரைக்கப் பட்ட அளவு 2 முதல் 2.5 செ.மீ நீள அகலங்களை கொண்டதாக இருத்தல்.

பச்சை நிறக் கழிவுகளையும் பழுப்பு நிறக் கழிவுகளையும் ஒன்றாக கலக்குதல், கரிமச்சத்து , தழைச்சத்து விகிதம் தான் மக்கும் காலம் வேகம் ஆகியவற்றை முடிவெடுகிறது. கரிமச்சத்து மற்றும் தழைச்சத்தின் விகிதத்தின் அளவு சிறியதாக இருந்தால் மட்டுமே மக்கும் முறை நடைபெறும் அந்த விகிதம் கிடைப்பதற்கு கரிமச் சத்து மற்றும் தழைச்சத்து அதிகமுள்ள கழிவுகளை நன்கு கலக்க வேண்டும் கிளைரிசீடியா இலைகள் அகத்தி, தக்கைப்பூண்டு இலைகள் ஆகியவை பச்சைக் கழிவுகளாகும். இலைகள் காய்ந்த புற்கள் ஆகியவை கரிமச்சத்து அதிகமுள்ள பழுப்பு நிறக் கழிவு களாகும். இவ்விரண்டு கழிவுகளையும் சேர்த்து மக்க வைத்தால் அக்கழிவுகள் குறைந்த காலத்தில் மக்கிவிடும் கால்நடை பறவைகள்

## கம்போஸ்ட் குவியல் அமைத்தல்

குறைந்தது 4 அடி உயரத்திற்கு கழிவுகளை போட்டு அவற்றின் அளவை சமப்படுத்த வேண்டும். மக்க வைக்கும் இடம் சற்று உயர்வான இடத்திலும் நல்ல நிழலிலும் இருக்க வேண்டும் கழிவுகள் அனைத்தையும் நன்கு கலக்கிவிட வேண்டும். கரிமச்சத்து மற்றும் தழைச்சத்து நிறைந்த கழிவுகளை மாற்றி மாற்றி பரப்புதலும் இடையிடையே கால்நடை கழிவுகளைக் கலக்குதலும் வேண்டும் இவ்வாறு அமைத்த குவியலுக்கு போதுமான அளவு ஈரப் பிடிப்பு அமைத்திட வேண்டும்.

## மக்குதலுக்கு தேவையான உயிர் உள்ளீடுகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நுண்ணுயிர் கூட்டுக்கலவை மக்கும் வேகத்தை துரிதப்படுத்தக்கூடிய பலவ கை நுண்ணுயிர்களைக் கொண்டுள்ளது. மட்கக்கூடிய கழிவு களுடன் இந்த நுண்ணுயிர்கள் சேர்க்கப்படாதபோது அப்பொருட் களில் இயல்பாக அமைந்துள்ள நுண்ணுயிரிகளே மக்கும் செயலைக் செய்கின்றன. இதனல் மக்கும் காலம் அதிகமாகிறது. அதே சமயம் நுண்ணுயிர்க் கூட்டுக்கலவையைச் சேர்க்கும் போது நுண்ணுயிர் செயல்பாடு முன்னரே தொடங்கி குறைந்த காலத்தில் மக்குதல் நிறைவடைகிறது. 1 டன் பயிர்க்கழிவுக்கு 2 கிலோ கூட்டுக்கலவை உபயோகப்படுத்த அறிவுறுத்தப்படுகிறது. 2 கிலோ கூட்டுக்கலவையை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து சரைசலாக்கிக் கொள்ள வேண்டும். இக்கரைசலை குவித்து வைக்கப்பட்டுள்ள திடக்கழிவில் நன்றாக தெளித்துக் கலக்க வேண்டும்.

## கம்போஸ்ட் படுக்கையில் காற்றோட்டம் ஏற்படுத்துதல்

திடக்கழிவுக்குவியலில் தேவையான அளவு உயிர் வாயு எனப்படும் ஆக்ஸிஜன் இருக்க வேண்டும். இதற்கு அக்குவியல் காற்றோட்டமுடையதாக இருக்க வேண்டும். குவியலைப் பதினைத்து நாட்களுக்கு ஒருமுறை கிளறிவிடுவதால் கீழுள்ள பொருட்களை மேலும், மேலேயுள்ள பொருட்கள் கீழும் மாறுகின்றன. இவ்வாறு கலக்குவதால் நுண்ணுயிரி செயல்பாடு தூண்டப்பட்டு மக்குதல் செயல் வேகமாக நடைபெறுகின்றது. சிலசமயங்களில் காற்றோட்டம் ஏற்படுத்த பக்கவாட்டில் அல்லது செங்குத்தான நிலையில் குழாய்களைப் பயன்படுத்தலாம் இவ்வாறு பயன்படுத்துவதால் கழிவுகள் மேலும் காற்றோட்டம் பெறுகின்றன.

தகவல் : ***வ.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேரராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை.***

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# கோடை காலத்தில் கால்நடைகளை பாரமரிப்பது எப்படி?



விவசாயிகளுக்கு வேளாண்மைக்கு அடுத்தப்படியாக பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது கால்நடைகளே. அந்த கால்நடைகள் இந்த கடுமையான கோடைகாலத்தில் கோடை வெப்பத்திலிருந்து பாது காப்பது எப்படி என்பதை இந்த பதிவில் விரிவாக பார்ப்போம்.

கால்நடைகள் விவசாயிகளுக்கு இராண்டாவது கண். அதை கோடையில் வெப்ப அயர்ச்சியில் இருந்து பாதுகாப்பது விவசாயிகளின் பொருப்பாகும்.

இந்த கால கட்டத்தில் பால் மற்றும் முட்டை இடுவது குறையும். சரிவர தீவனம் உட்கொள்ளாத காரணத்தால் வளர்ச்சி மற்றும் இனப்பெருக்க தன்மை குறையும். இதை தடுக்க கால்நடைகள் பாதுகாக்க சில குறிப்புகள்.

1) கால்நடைகளுக்கு ஒரு நாளைக்கு 4 அல்லது 5 தடவை பாதுகாக்கபட்ட நல்ல குடிநீரை கொடுக்க வேண்டும். மேய்ச் சலுக்கு சென்றாலும் கூட அங்காங்கு மேய்ச்சல் நிலங்களில் 'குடிநீர் தொட்டி' களை அமைத்து குடிநீரை நிரப்பி குடிப்பதற்கு வைக்க வேண்டும். மாடுகள் குடிக்கும் நீரில் அடர் தீவனத்தை கலந்து கொடுக்க வேண்டும்.

2) வெப்ப அயர்ச்சியை தடுக்க மாடு கொட்டைகளில் மின் விசிறி வைக்க வேண்டும். மேலும் கொட்டகையின் மீதுள்ள வெப்பத்தை குறைக்க நீர் பீச்சி தெளிக்க வேண்டும்.

3) எருமை மாடுகளை வெப்ப அயர்ச்சியிலிருந்து மீள குளியல் தொட்டிகளை உருவாக்கிட வேண்டும்.

4) மேய்ச்சலுக்கு காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 3 மணியிலிருந்து 7 மணி வரையிலும் மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும்.

கடுமையான வெயில் நேரத்துல மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது.

**ஆடுகள் பாரமரிப்பு**

வெள்ளாடுகளை விட செம்மறி ஆடுகளில் உடலில் உரோமங்கள் அதிகமாக இருப்பதால் வெப்ப அயர்ச்சியால் பாதிப்பு ஏற்படும். ஆடுகளுக்கு தேவையான சோடியம் பொட்டாசியம் சத்துகளை கொடுப்பதுடன் தாது உப்பு கட்டி களையும் கட்டி தொங்க விட வேண்டும். ஆடுகள் அவ்வப் போது அவற்றை நாக்கால் சுவைத்து கொள்ளும். ஒரு ஆடு 8 முதல் 12 லிட்டர் தண்ணீர் தினசரி பருகிட செய்ய வேண்டும்.

**கோழிகள் மற்றும் பறவைகள் பாரமரிப்பு?**

கோழிகளால் வெப்ப காலங்களில் அதிகமாக தீவனம் உட்கொள்ள முடியாது. இதனால் கோழிகள் எடை குறையும், முட்டையிடும் திறனும் வெப்ப அயர்ச்சியால் பாதிக்கும். கோழி கூண்டுகளில் காற்றோட்ட வசதி ஏற்படுத்திட வேண்டும். கோழி பண்ணையை சுற்றி வெப்ப தாக்குதலை தடுக்க தடுப்பான் அமைக்க வேண்டும். கோழிகளுக்கு பகல் நேரத்தில் தீவனம் வழங்கக்கூடாது. விடியற்காலை இரவு நேரத்தில் வழங்கலாம். குடிநீரில் விட்டமின் சி 10 மில்லி கிராம் கலந்து கொடுக்க வேண்டும். வெப்ப அயர்ச்சியை நீக்க, பி.காம்பிளக்ஸ், குளுக் கோஸ் போன்றவற்றை கலந்து கொடுக்கலாம். செல்ல பிராணிகள் கடுமையான வெயில் நேரத்துல வாகனங்களில் கொண்டு செல்லக்கூடாது.

பறவைகளுக்கு ஆங்காங்கு குடிநீர் பாத்திரங்களை கொண்டு நீர் நிரப்பி வைக்க வேண்டுமென கால்நடை பாரமரிப்பு துறை சார்பாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# விவசாய கதை புத்தகம் வெளியீட்டு விழா நடந்தது

தூத்துக்குடி, மே 4

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் இலக்கிய சாரல் சார்பாக 'இது எங்கள் பூமி' புதிய விவசாய கதை புத்தகம் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

கோவில்பட்டி இலக்கியச் சாரல் சார்பாக கோவில்பட்டி எழுத்தாளர் கோ.சுரேஷ்குமார் எழுதிய 'இது எங்கள் பூமி' என்ற விவசாயம் தொடர்பான 27 கதைகள் கொண்ட புதிய புத்தகம் வெளியீடு விஸ்வாஸ் மற்றும் சிவதாம் கல்வி அறக்கட்டளை யோகா தியான கூட்ட அரங்கில் நடந்தது.

மேனாள் தலைமை ஆசிரியர் நல்லாசியர் ப.ஜான்கனேஷ் தலைமை தாங்கினார். ஞான ஒளி மலர் மேனாள் தலைமை ஆசிரியை இந்திராணி, முனைவர் முருக சரஸ்வதி, கவிஞர் இரா.சிவானந்தம், எழுத்தாளர் போத்தி ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

த.மு.எ.ச செயற்குழு உறுப்பினர் பெ.ஜெகநாதன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முதல் புத்தகத்தை வெளியிட்டார்.

தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேனாள் மேலாளர் பா.சங்கர், தமிழாசிரியை இராதா, கிராம நிர்வாக அலுவலர் முருகானந்தம் ஆகியோர் முதல் புத்தகங்களை பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து வரகவி நல்லாசிரியர் மா.முருகேசன், பேராசிரியை செல்வம், மேனாள் களத்து மேடு மாத இதழ் ஆசிரியர் தமிழ் தம்பி, மேனாள் தபால் துறை ஊழியர் தவமணி, யூ.பி.எம்.எஸ். பள்ளி ஆசிரியர் சந்தன மாரியப்பன், பஞ்., யூனியன் பள்ளி தலைமை ஆசிரியை பேச்சியம்மாள், இலுப்பையூரணி தமிழ் பாப்பிஸ்டு பள்ளி



தலைமை ஆசிரியர் ஸ்ரீதர், பிரமுகர் கோபால கிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி பேசினார்கள். முடிவில் எழுத்தாளர் கோ.சுரேஷ்குமார் ஏற்புரை வழங்கி நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை இலக்கியச் சாரல் இயக்குநர் தினகரன் செய்தார்.

நிகழ்ச்சியில் பல்வேறு திறன் ஆற்றல் கொண்ட இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் கல்லூரி மாணவர், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அனைவருக்கும் கோடை வெயில் தாக்கம் குறைய பப்பாளி மற்றும் தர்பூசணி பழவகை இயற்கை பானம் வழங்கப்பட்டது.



# தமிழ்நாட்டில் சூரிய ஆற்றல் திட்டங்கள்

அறிமுகம்

தமிழ்நாடு, இந்தியாவில் சூரிய ஆற்றல் உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது. அரசு பல்வேறு திட்டங்கள் மூலம் சூரிய ஆற்றலை ஊக்குவித்து வருகிறது. குறிப்பாக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு பல சலுகைகள் மற்றும் உதவித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன.

**சூரிய ஆற்றலின் முக்கியத்துவம்**

சூரிய ஆற்றல் என்பது முடிவில்லாத, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒரு சக்தி வளமாகும். இது மாசு ஏற்படுத்தாதது, பராமரிப்பு செலவு குறைவானது, மற்றும் நீண்டகால பயன் தரக்கூடியது. விவசாயத்தில் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது, ஏனெனில் பாசனம், மின்சாரம் போன்ற தேவைகள் எளிதாக பூர்த்தி செய்யப்படுகின்றன.

**தமிழ்நாட்டில் சூரிய ஆற்றல் திட்டங்கள்**

**1. சோலார் பம்ப் செட் திட்டம்**

தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு சோலார் பம்ப் அமைக்க அதிக மானியம் வழங்குகிறது. இந்த திட்டத்தின் மூலம் விவசாயிகள் மின்சாரத்தை சாராமல் தங்களின் வயல்களுக்கு நீர் பாசனம் செய்ய முடிகிறது.

**இந்த திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- 60% முதல் 90% வரை மானியம்
- மின்சார இணைப்பு இல்லாத இடங்களிலும் பயன்பாடு
- எளிய பராமரிப்பு

இது குறிப்பாக மழை சார்ந்த விவசாயத்தை குறைத்து, ஆண்டு முழுவதும் பயிரிட உதவுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

### 2. PM-KUSUM திட்டம்

மத்திய அரசின் முக்கிய திட்டமான PM-KUSUM மூலம் விவசாயிகள் தங்கள் நிலங்களில் சூரிய மின்சாரம் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்த திட்டத்தில் மூன்று கூறுகள் உள்ளன:

- சோலார் பம்ப் அமைத்தல்
- நிலத்தில் சூரிய மின் நிலையம் அமைத்தல்
- உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை விற்பனை செய்தல்

இதன் மூலம் விவசாயிகள் தங்களின் வருமானத்தை அதிகரிக்க முடிகிறது.

### 3. மின்சாரம் விற்பனை திட்டம்

தமிழ்நாட்டில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் சூரிய மின்சாரம் உற்பத்தி செய்து அரசுக்கு விற்கும் வாய்ப்பு உள்ளது. இது ஒரு கூடுதல் வருமானமாக அமைகிறது.

**இந்த திட்டத்தின் பயன்கள்**

- நிலத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்துதல்
- கூடுதல் வருமானம் பெறுதல்
- நீண்டகால முதலீடு

### 4. சோலார் பார்க் திட்டங்கள்

தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் சோலார் பார்க் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த திட்டங்கள் மூலம் பெரிய அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

**விவசாயிகளுக்கு கிடைக்கும் பயன்கள்**

- நிலத்தை வாடகைக்கு கொடுத்து வருமானம்
- வேலை வாய்ப்புகள்
- உள்ளூர் வளர்ச்சி

### 5. சோலரைஸ் செய்யப்பட்ட பாசன மின்சாரம்

விவசாய மின்சாரத்தை சோலார் மூலம் இயக்கும் முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. இதனால் நாள் நேரத்தில் மின்சாரம் கிடைக்கிறது.

**இதன் பயன்கள்**

- இரவு பாசனம் தேவையில்லை
- நீர் மேலாண்மை எளிதாகிறது
- உழைப்பு குறைகிறது

விவசாயிகளுக்கான பயன்பாடுகள்

சூரிய ஆற்றல் திட்டங்கள் விவசாயிகளுக்கு பல்வேறு வகையில் உதவுகின்றன:

**பொருளாதார நன்மைகள்**

- டீசல் மற்றும் மின்சார செலவு குறைவு
- கூடுதல் வருமானம்
- நீண்டகால சேமிப்பு

**சுற்றுச்சூழல் நன்மைகள்**

- மாசு குறைவு
- இயற்கை வளங்கள் பாதுகாப்பு
- நிலத்தடி நீர் மேலாண்மை

**சமூக நன்மைகள்**



- கிராமப்புற முன்னேற்றம்
- வேலை வாய்ப்பு அதிகரிப்பு
- தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி

**எதிர்கால வாய்ப்புகள்**

தமிழ்நாட்டில் சூரிய ஆற்றல் துறைக்கு மிகப்பெரிய எதிர்காலம் உள்ளது. அரசு 2030க்குள் அதிக அளவு சூரிய மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு வைத்துள்ளது.

**எதிர்காலத்தில்**

- அனைத்து விவசாயிகளும் சோலார் பயன்பாடு
- முழுமையான பசுமை ஆற்றல் மாற்றம்
- விவசாயத்தில் தொழில்நுட்ப முன்னேற்றம்

**முடிவு :** சூரிய ஆற்றல் திட்டங்கள் தமிழ்நாட்டின் விவசாயத் துறையில் பெரிய மாற்றத்தை உருவாக்குகின்றன. இது விவசாயிகளுக்கு பொருளாதார ரீதியாகவும், சுற்றுச்சூழல் ரீதியாகவும் பல நன்மை களை வழங்குகிறது. சரியான விழிப்புணர்வு மற்றும் அரசின் ஆதரவுடன், இந்த திட்டங்கள் மேலும் விரிவடைந்து, விவசாயி களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும்.

சூரிய ஆற்றல் என்பது எதிர்காலத்தின் சக்தி மட்டுமல்ல, விவசாயிகளின் வளர்ச்சிக்கான முக்கிய கருவியாகவும் அமைகிறது.

கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com.***





**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பூச்சிகளைப் கட்டுப்படுத்துவதில் தாவர பூச்சிக்கொல்லிகளின் பங்கு

பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் தாவரப் பூச்சிக்கொல்லிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவை இயற்கை வழிகளில் தயாரிக்கப்படும் மருந்துகளாகவும், சுற்றுச்சூழலுக்கு பாதுகாப் பானவையாகவும் அறியப்படுகின்றன.

## தாவரப் பூச்சிக்கொல்லிகளின் அறிமுகம்

தாவரப் பூச்சிக்கொல்லிகள் என்பவை வேம்பு, துளசி, ஆடா தொடை, நொச்சி, அகத்தி, பூண்டு, மிளகாய் போன்ற தாவரங் களிலிருந்து திரட்டப்படும் பொருட்களால் தயாரிக்கப்படுகின்றன. இவை பூச்சிகளை விரட்டியடிப்பதோடு அவற்றின் வளர்ச் சியையும் தடுக்கின்றன. ரசாயனப் பூச்சிக்கொல்லிகளைப் போல இவை மண், நீர், காற்றைப் பாதிக்காமல் பயிர்களைப் பாதுகாக்கின்றன.



இவற்றின் பயன்பாடு இயற்கை வேளாண்மையில் முக்கியமானது. பயிர்களின் சேதத்தைத் தடுத்து, உணவு பாதுகாப்பை உறுதிசெய்கின்றன.

## நன்மைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

தாவரப் பூச்சிக்கொல்லிகள் நன்மை செய்யும் பூச்சிகளை அழிக்காது, அதனால் இயற்கை சமநிலையைப் பராமரிக் கின்றன. ரசாயன மருந்துகள் 99% சுற்றுச்சூழலைப் பாதிக் கின்றன என்று கூறப்படுகிறது. இவை உணவுச் சங்கிலியில் நச்சுத் தன்மையை ஏற்படுத்துவதில்லை. விவசாயிகள் இவற்றை எளிதாக தயாரித்து பயன்படுத்தலாம். நீண்டகாலப் பயன் பாட்டில் பூச்சிகள் எதிர்ப்பு திறனும் பெறுவதில்லை.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

## பிரபலமான தாவரப் பூச்சிக்கொல்லிகள்

வேம்பு கொட்டைக் கரைசல் கம்பளிப்புழு, அசுவினி, தத்துப் பூச்சி, இலைச்சுருட்டுப் புழு போன்றவற்றை கட்டுப்படுத்தும் துளசி, பூண்டு, மிளகாய் சாறு பயிர்களை உண்ணும் பூச்சிகளை விரட்டுகிறது.



நொச்சி, அகத்தி தாவரங்கள் துகள் வடிவில் பயன்படுத்தப்படு ன்றன. இவை பசை அல்லது சாறு வடிவிலும் கிடைக்கின்றன.

## தயாரிப்பு முறைகள்

வேம்பு எண்ணெயை சோப்பு நீருடன் கலந்து தெளிக்கலாம். 50 கிராம் வேம்பு இலைகளை 1 லிட்டர் நீரில் கொதிக்க வைத்து வடிகட்டி பயன்படுத்தவும். பூண்டு 50 கிராம், மிளகாய் 25 கிராம், தண்ணீர் 1 லிட்டரில் 24 மணி நனைத்து தெளிக்கலாம். இவற்றை காலை அல்லது மாலை நேரத்தில் தெளிப்பது சிறந்தது. 10-15 நாட்களுக்கு ஒரு முறை திரும்பத் தெளிக் கவும்.வீட்டுத் தாவரங்களுக்கும் இவை பயன்படுத்தலாம். இயற்கையானவை என்பதால் பாதுகாப்பானவை.

## குறிப்பிட்ட பயிர்களில் பயன்பாடு

பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை வேறுபடுத்தி பார்த்து மருந்து தேர்ந்தெடுக்கவும். உதாரணமாக, சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கு வேம்பு சிறந்தது. மரப்பயிர்களில் ஆடாதொடை, நொச்சி பயன்படுத்தப்படுகின்றன. தோட்டப் பயிர்களில் உயிரியல் முறையுடன் இணைத்து பயன்படுத்தினால் சிறந்த பலன். பூஞ்சை, பாக்டீரியா கொல்லி களுடன் கூடுதல் பாதுகாப்பு.

## சவால்கள் மற்றும் தீர்வுகள்

ரசாயன மருந்துகளுக்கு மாற்றாக இவை பயன்படுத்தப் பட்டாலும், சரியான அளவு கவனிக்க வேண்டும். அதிக அளவு பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கலாம். விவசாயிகள் பயிற்சி பெறுவது அவசியம். இயற்கை வேளாண்மைக்கு ஏற்றவாறு உயிரியல் கொல்லிகளுடன் இணைப்பது சிறந்தது. அங்கக வேளாண்மை கொள்கையின்படி பொருளாதார சேத நிலையைத் தடுக்கவும்.

**எதிர்கால முக்கியத்துவம்**

தாவரப் பூச்சிக்கொல்லிகள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. 2025ல் விவசாய சவால்களுக்கு இயற்கை தீர்வாக அறியப் படுகின்றன. நீலம் மாற்று விவசாயத்தை ஊக்குவிக்கின்றன. இவை பயன்படுத்துவதன் மூலம் உணவு பாதுகாப்பும், சுற்றுச் சூழல் பாதுகாப்பும் சாத்தியமாகின்றன.

தகவல் : ***மதுரஞ்சனா. ஜெ,முனிசா.மா, பசுபதி, கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, மதுரை – 625 532.***



# கோடை காலத்தில் செல்லப்பிராணி பராமரிப்பு

வெயிலின் தாக்கம் மனிதர்களாகிய நம்மை வெகுவாக தாக்கும் தருவாயில் பாதுகாத்து கொள்ள நிழலைத் தேடுகிறோம், குளிர்ந்த நீரை பருகுகிறோம், குளிருட்டிகளை நாடுகிறோம். இதுபோல் நம் வீட்டில் வளரும் செல்லப்பிராணிகாளான நாய் களுக்கும் செய்வது முக்கியம். இவற்றில் அனைத்தையும் கொடுக்க முடிந்தால் மிகச்சிறந்தது. ஏனெனில் வெயிலின் தாக்கத்தால் அவைகளுக்கு வெப்ப அதிர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே கீழ்கண்ட முறைகளை நன்கு உணர்ந்து நம் செல்லப் பிராணிகளை வெப்ப அதிர்ச்சியிலிருந்து பாதுகாக்கலாம்.

**1. எப்போதும் தண்ணீர் கிடைக்கச் செய்யவும்**

எப்போதும் புதிய மற்றும் சுத்தமான குடிநீர் கிடைக்க வேண்டும். சில நேரங்களில் தண்ணீரில் ஐஸ் சேர்த்தால் உடல் சூட்டை குறைக்க உதவும். இது நீர்ச்சத்து இழப்பைத் தடுக்கவும், அதிக மூச்சுத்திணறலைக் குறைக்கவும் உதவும்.

**2. குளிரான நேரங்களில் நடைப்பயிற்சி**

அதிகாலை அல்லது மாலை நேரங்களில் மட்டுமே செல்லப் பிராணிகளை நடைப்பயிற்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். சாலைகள் மிகவும் சூடாக இருக்கும் போது அவற்றின் கால் பாதங்கள் பாதிக்கப்படலாம்.

மேலும்

- நிழலான பாதைகளை தேர்வு செய்யவும்
- அதிக நேரம் வெளியில் விடாமல் கவனிக்க வேண்டும்
- சூடான தரையை கையால் தொட்டு சரிபார்க்க வேண்டும்.

**3. வாகனத்தில் ஒருபோதும் விடாதீர்கள்**

நிறுத்தப்பட்ட கார் உள்ளே வெப்பநிலை மிக விரைவாக அதிகரிக்கும். சிறிது நேரம் கூட விட்டு சென்றால் வெப்ப அதிர்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளது.

### 4. வெப்ப அதிர்ச்சி அறிகுறிகளை கவனிக்கவேண்டும்

- இதய துடிப்பு அதிகரிப்பு
- சோர்வு
- கண்கள் மங்குதல்
- அதிக மூச்சுவிடுதல்

இவை தெரிந்தால் உடனே கால்நடைமருத்துவரை அணுக வேண்டும். அதற்கு முன் உடலை குளிர்விக்க ஐஸ் பயன் படுத்தலாம்.

### 5. நிழல் மற்றும் குளிர்ந்த இடம் வழங்க வேண்டும்

வெளியில் இருந்தால் மர நிழல் அல்லது கூரை ஏற்பாடு செய்யவும். வீட்டில் காத்தாடி அல்லது ஏசி பயன்படுத்தவும். குளிரூட்டும் மேட் அல்லது ஈர துணி பயன்படுத்தலாம்.

### 6. பராமரிப்பு குறிப்புகள்

தினசரி முடி துலக்குதல் மூலம் அதிக முடி நீங்கும். இது உடல் வெப்பத்தை கட்டுப்படுத்த உதவும். நீண்ட முடி உள்ள செல்லங் களுக்கு லேசான திருத்தம் உதவும்.

### 7. தெள்ளுப்பூச்சி தாக்கத்திலிருந்து பாதுகாப்பு

பூச்சிகள் அதிகமாக இருக்கும். மருந்து காலர், ஏம்பு போன்ற வற்றை பயன்படுத்தலாம்.

### 8. வீட்டில் தயாரிக்கும் குளிரூட்டும் உணவுகள்

- தயிர்
- கோழி துண்டுகள், ஐஸ்
- பழ ஐஸ் ஆகியவற்றை சீராண இடைவெளியில் அளித்து உடல் சூட்டை தணிக்கலாம்.

### 9. குட்டி நாய்களுக்கு தடுப்பூசி

பார்வோ வைரஸ் தடுப்பூசி அவசியம்.

### 10. கால் பாதுகாப்பு மற்றும் தண்ணீர்

கால்களை சூடான தரையிலிருந்து பாதுகாக்கவும். எப்போதும் குடிக்க மற்றும் குளிக்க தண்ணீர் கிடைக்கச் செய்யவேண்டும். பழங்களும் கொடுக்கலாம்.

தகவல் : முனைவர் மா.வெங்கடேசன் மற்றும் முனைவர் சு.சிவ ராமன், கால்நடை சிகிச்சை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் - 636 112.

## Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW
isha
POWERGRID
BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**